(7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

299. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு விதிகளின் 10 ஆவது விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 16-12-1977 ஆம் தேதியிடப்பெற்ற 3360 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

300. தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் (பதிவு செய்தல்) விதிகளின் 3 வது விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (நீதிமன்றங்கள்-I) 6-1-1978-ஆம் தேதியிடப்பெற்ற 50 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 25/1955) 8 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.].

301. 1975-76 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கை (சிவில்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*107. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1978).

**108. கோரிக்கை எண். 30—சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

---

*6-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

**4-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது